# ஒரு துளி அமுதம்

# (One Drop Of Amudham)

புதினம்

வெ.அனந்தபத்மநாபன்

# முகப்பு

இப்புதினம் கற்பனையை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டது. இது புனைவு இலக்கியமே! கற்பனை கதாபாத்திரங்கள், கற்பனை நிகழ்வுகள் என 'இந்த வயதில்' எனக்குள் கொஞ்ச நாட்கள் ஒரு கற்பனை உலகமே தோன்றிக் கொண்டு இருந்தது; நான் அதற்குள்'இரகசியமாக' வாழ்ந்து கொண்டிருந்தேன். இரண்டு மூன்று மாதங்கள் இந்த கற்பனை எனக்குள் ஓடியது.

ஆனால் பேசப்படுகின்ற விஷயங்கள் யதார்த்த வாழ்க்கைக்கு நேரடி தொடர்புடையவை. தந்தை – மகன் உறவில் எழும் முரண்பாடும் என்றும் மாறாத ஒரு இளமைத் தன்மை உடைய ஒரு முரண்(Conflict) .அதற்கான காரணகாரியங்களை ஆய்வதில் ஒரு புதிய கோணத்தில் பிரச்ணைகளை நான் அணுகியிருக்கிறேன்.

மிக ஆழமான நுட்பமான உளவியல் கருத்தை – மிக எளிமையாகச் சொல்லியிருக்கிறேன். தனி மனித உறவுகளிடையே ஏற்படும் முரண்களுக்கு (Conflict) மையமாக ஏதோ ஒரு உளவியல் சார்ந்த அழுத்தமே காரணமாக பெரும்பாலும் அமைகிறது.சில சமயம் இவ்வழுத்தம் தத்துவார்த்தமாக போவதும் உண்டு.

சில போழ்து சமூகக் காரணிகளும்இது போன்ற முரண்களுக்குக் காரணமாக அமைவது உண்டு. இப்புதினத்தில் உளவியல் நோக்கில் பிரச்சினையை அணுகியிருக்கிறேன்.

தந்தை–மகன் உறவு மோதல்களை பல இந்திய திரைப்படங்கள் பேசியிருக்கின்றன. பல தமிழ்ப் படங்கள் பேசியிருக்கின்றன. எனவே பாச உணர்வைக் கூறும் சில தமிழ்ப் படங்களைப் பற்றிய குறிப்பும் இப்புதினத்தில் உண்டு

இக்கதையின் நாயகன் ஒரு விளையாட்டு வீரன். Sports man ship -என்னும் தத்துவத்தையும், அதன் உளவியல் கூறுகளையும் உணர்ந்து கொண்டவன்.

எனவே, சில விளையாட்டுகபை் பற்றிய குறிப்பும் இப்புதினத்தில் உண்டு. சினிமாவையும் விளையாட்டையும் இரண்டு கதாபாத்திரங்களாகவே உருவகித்து கதையின் ஊடு நடக்க விட்டிருக்கிறேன். ஒரு சிறிய புதினத்தில் சினிமா, விளையாட்டு

இவ்விரண்டு கலைகளின் அனைத்து அம்சங்களையும்ஆராய்ந்து விட முடியாது. எனவே ஒரு சில கூறுகளை மட்டும் விவாதித்திற்கு எடுத்துக் கொண்டுள்ளேன். வித்தியாசமான முயற்சி. படித்துவிட்டுக் கருத்துக் கூறுங்கள்.

**வெ.அனந்தபத்மநாபன்**

# 1. விளையாட்டே வாழ்க்கை!

வருடம் 1959 ஜீலை மாதம்

மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு ஒட்டியவாறு, விரித்திருந்த அச்சிறு நகரில், கேரளத்துக் காற்று வீசும். வானில்கருமேகங்கள் மேதியென (எருமை என) பவனி செல்லும் அழகு - ஜீலை மாதக் காட்சிகளில் ஒன்று.

அந்த ஜூலை மாதத்திலேயும் மேகங்கள் சாரல்களையும் சில நேரங்களில் பலத்த மழையையும் வீசிச் சென்றன. மேடும் பள்ளமுமான அவ்வூரில் மழை பெய்தால் தண்ணீர் தேங்குவது அபூர்வம். மழைத் தண்ணீர் எல்லாம் வடிந்து வடிந்துஓடிவிடும்.அன்றும் அப்படியே ஓடிவிட்டது. . மழை பெய்து முடிந்திருந்தது. கிருஷ்ணகாந்த் கண்ணாடி முன் நின்று கொண்டிருந்தான். அவன் வீட்டு ஓடுகளின் மீது, மழைத் தண்ணீர் விழும் சப்தம் சுத்தமாக நின்று போனதால்,மழை விட்டு வட்டதை அவன் உணர்ந்து கொண்டான்.அவனுக்கு மழை வருவது பிடிக்கவில்லை.அவன் விளையாடப் போக வேண்டும். அவன் வயதை ஒத்த நண்பர்கள் - துரை, கோபாலன், கண்ணன்,முருகன், சக்தி, விசுவநாதன், ராமநாதன். பெரிய சுப்பிரமணி, சின்ன சுப்பிரமணி,''எல்லோரும் விளையாடக் காத்திருப்பது அவனுக்கு மனதில் ஓடியது.

அன்றைய விளையாட்டுத் திட்டம் சடுகுடு( கபடி) என நினைத்ததும் அவன் வாய் தன்னையறியாமல் 'சடுகுடு –சடுகுடு' என பாடியது.பதின்மூன்று வயதான அவன் இன்னும் கண்ணாடி விட்டு அகலவில்லை. வகிடு எடுக்காமல் தலைமுடியை பின்னோக்கி ஒட்டு மொத்தமாக வாரிக் கொண்டான்.ஒரு வாரத்திற்கு முன் தரையில் அமர்ந்து- பகவதி டாக்கீஸில், பார்த்த உத்தமபுத்திரன் படத்தின் சிவாஜிகணேசன் அவன் மனம் முழுக்க வியாபித்து இருந்தார்.

அவன் மனதில் சிவாஜிகணேசனின் ஆதிக்கம் மிக அதிகம். உத்தமபுத்திரனின் ''மாமா பிள்ளை''இளவரசன்பாணியில் , அவன் சற்று கையசைத்து வேகமாக நடந்து பார்த்தான்.

அப்படி - இப்படி – ஒயிலாக, ஸ்டைலாக கொஞ்சம் வேகமாகக் கைகளை வீசியபடி, மேனியை கொஞ்சம் சாய்த்தபடி - நடந்து பார்த்தான். வாய், ''யாரடி நீ என் மோகினி ?'' என முணுமுணுத்தது.

அவன் தந்தை கோவிந்தராசன் அவன் நின்றிருந்த அறைக்குள் நுழைந்தான். அவனைப் பார்த்து ''என்னடா? மனசுலே ஒனக்கு பெரிய

சிவாஜிகணேசனு நெனைப்போ ? சகிக்கிலைடா ! மொதல்லே தலையை வகிடு எடுத்து வாரு –‘‘ என்று கோபமாகக் கத்தினாா் கோவிந்தராசன்.

கிருஷ்ணகாந்திற்கு மூக்கிற்கு மேல் கோபம் வந்து விட்டது. அவன் அப்பா ‘‘சகிக்கிவில்லை’’ என்று சொன்னது–தன் நடையையா, ஹோ்ஸ்டைலையா, சிவாஜிகணேசன் நடிப்பையா என்று சந்தேகம் வந்தது!

‘‘என்னப்பா சகிக்கிலே!’’ என்று கேட்டான். ‘‘உன் ஹோ்ஸ்டைல் சகிக்கிலே – வகிடு எடுத்து வாறு’’என்று கூறிய கோவிந்தராசன், அவரே, சீப்பை எடுத்துக் கொண்டு வந்து, அவனுக்கு வகிடு எடுத்துவிட்டு தலை சீவ ஆரம்பித்தான்.கிருஷ்ணகாந்த் அவரது பிடியிலிருந்து திமிறினான். ‘‘மொத் - மொத்’’ என்று முதுகில் என்று இரண்டு அடி விழ அடங்கி நின்றான்.

‘‘தோ – பாரு! கிருஷ்ணகாந்த் - இந்த சிவாஜிகணேசன் ஸ்டைல் எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். மொதல்ல ஒழுங்காப் படிச்சுப் பாஸ் பண்ற வழியைப்பாரு , இன்னும் இரண்டு வருஷத்திலே பத்தாவது பரிட்சை எழுதனும்’’ பெரிய பரிட்சை ஞாபகம் இருக்கா – நீ S.S.L.C பரிட்சை எழுத போகனும், படிப்பிலே கவனம் வை; கணக்கு எல்லாம் போட்டாச்சா ? என்று உரக்கப் பேசினாா்.கோவிந்த ராசன்.

கிருஷ்ணகாந்திற்கு கணக்கு, சயின்ஸ்,(அறிவியல்) சமூகவியல், வரலாறு, தமிழ் - ஆங்கிலம் எந்தப் பாடமும் பிடிக்காது. ‘இந்தி பரிட்சை மட்டும் பரவாயில்லை; அப்படியே வினாத்தளைப் பாா்த்து எழுதி விட்டு வந்தாலும் - பண்டிட் ஒன்றும் சொல்ல மாட்டாா்கள். மத்த பாடம் எவ்லாம் வேப்பங்காய்தான்’ என நினைத்துக் கொண்டான்.

கொஞ்ச சேரம் அமைதி நிலவியது அங்கே . பின் கோவிந்தராசன் - ‘‘தோ பாரு -! போய் வெளையாடிட்டு வா! இன்னிக்கு சடுகுடு ஆட்டமா? காலை, கையை ஒடிச்சுக்காம பத்திரமா, ஆடிட்டு வௌக்கு வெச்ச உடனே வீட்டுக்கு வந்துடனும்’’ என்ன தெரிஞ்சுதா’’ என்று கூறினாா்?

விட்டால் போதும் என்று கிருஷ்ணகாந்த் ஓடத் துவங்கினான். ஆனால் அவன் தாய் கோகிலவாணி வாசல் கதவின் முன் நின்று வழி மறித்தாள். ‘‘டே! தாா் ரோட்டிலே எல்லாம் வெளையாடக் கூடாது – போயி எல்லாரும் கோயில் மைதானத்திலே வெளையாடுங்க -’’ என்றாள் கோகிலவாணி.

"அதெல்லாம் நாங்க பாாத்துக்கறோம், என்றான் கிருஷ்ணகாந்த்" கொஞ்சம் இருடா ரெண்டு கைமுறுக்கு த்ரேன். – சாப்பிட்டு போ! மத்தியானம் சாப்பிட்டது-பிள்ளை- அப்புறமா ஒன்றுமே இல்லே!" என்றாள்.

"போ! போ! நீ சுட்ட முறுக்கை நீயே சாப்பிடு, ஒரே சிக்கு வாசனை அடிக்குது–பத்துப் பதினைந்த நா ஆச்சா சுட்டு," என்று கோகிலவாணியை இலேசாகத் தள்ளிவிட்டு, ஓட்டமாக நடந்தான் கிருஷ்ணகாந்த்'

# 2. சடுகுடுவும் - கிரிக்கட்டும் ஒரு சாதி

அவன் வீடு அமைந்திருந்த சாலையின் - தார் ரோட்டில் சடுகுடு விளையாட்டு ஏற்கனவே களைகட்டிவிட்டது. துரை, கோபாலன், முருகன்,பெரியசுப்ரமணி,ஒரு பக்கமும், சக்தி, விசுவநாதன்,ராமநாதன், சின்னசுப்பிரமணி முதலானோர் இன்னொரு புறமாகவும் - இரண்டு டீமாக அமைந்து விளையாட்டு நடந்து கொண்டிருந்தது.

அந்தச் சாலையில் எப்போதாவதுதான் வண்டி வாகனம் வரும். அவ்வப்போது ஏதாவது சைக்கிள்கள் வரும். அவ்வளவுதான், எனவே அது அவர்களுடைய விளையாட்டு மைதானம்.

கோபாலன் ஒரு கட்சியின் தலைவன் - டீம் “ டே! கிருஷ்ணகாந்த் - ஏண்டா லேட்? ரெண்டு டீமும் புல்லாயிடுச்சு! எவனாச்சும் ஓடிட்டானா, (பாதியில் விளையாட்டை விட்ட விட்டு போய்விட்டால்) ஒன்னை சேத்துக்கறோம்.!” என்றான் அவன் கிருஷ்ணகாந்தைப் பார்த்து, சரிஎன்று கிருஷ்ணகாந்த் ஓரமாக விளையாட்டைப் பார்த்தவாறு நின்று கொண்டான்.

“டே! அவன் தலையைப் பாருங்கடா!” என்றான் சக்தி –“என்னடா? சிவாஜிகணேசன் ஹேர்ஸ்டைல் என்னாச்சு? -வகிடு எடுத்த பொம்பளை மாதிரி சீவியிருக்கே! “ என்றான் சக்தி.

கிருஷ்ணகாந்திற்கு வெட்கமாய் போய்விட்டது. இரண்டு கைகளிலும் தலைமுடியைப் பின்பக்கமாக வாரி கொண்டான். அவனுக்குள் சிவாஜிகணேசன் சிலிர்த்துக் கொண்டார். “இப்ப சரியா?” என்றான் சக்தியைப் பார்த்து, “சரிடா” என்றான் சக்தி“எல்லாம் அப்பா செஞ்ச வேலை” என்று முணுமுணுத்தான் கிருஷ்ணகாந்த்.

சடுகுடு - சடுகுடு - சடுகுடு - -என்று சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.சிலர் கபடி – கபடி என்று பாடினர். விசுவநாதன் யார் பாடிக் கொண்டு வந்தாலும், அவன் கால்களைப் பிடித்து – மடக்கி வீழ்த்தி விடுவதில் கில்லாடி. அவன் பிடித்ததும் மற்றவர்கள் அவனை சுற்றி வளைத்து விடுவார்கள். பாடிக் கொண்டே – வந்த எதிர் டீம்காரன் மூச்சை விட்டுவிடுவான் . (அதாவது பாட்டை நிறுத்திவிடுவான்)) அவன் அவுட் - வெளியே போக வேண்டியதுதான். ஓரே சத்தமாக இருக்கும்.

விளையாட வந்தவர்கள் எல்லாம் கடைசி வரை விளையாட்டில் இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை. பாதியில் யார் வேண்டுமானாலும் 'ஜுட்'என சொல்லிவிட்டு ஓடிவிடலாம். பத்திக்கு மாற்றாக ஆள் இருந்தால் எடுத்துக் கொள்வார்கள். இல்லாவிட்டால் இரண்டு டீம்களின் ஆட்டக்காரர்கள் சம எண்ணிக்கைப் பற்றி எல்லாம் கவலை இல்லாமல் விளையாட்டு தொடரும்.

கிருஷ்ணகாந்த் யாராச்சும் ஜுட் சொல்வானா! என்று பார்த்துக் கொண்டிருந்தான்.விசுவநாதன் முனைப்பாக விளையாடிக் கொண்டிருந்தான்... அவன் காத்திருந்தது வீண் போகவில்லை. துரை திடீரென்று ரெண்டு விரல்களைக் காட்டிவிட்டு "ஜுட்" என்று சொல்லிக் கொண்டே ஓடிவிட்டான். மற்றவர்கள் அவனது பேச்சைக் கேட்டார்களா என்பது பற்றிறெல்லாம் கவலைப்படவில்லை.

சக்தி வாய் துடுக்குடன் "டே" அவன் வயித்திலே பூச்சி இருக்குடா! என்று கூறினான். கூடவே "டே! துரை காலைலே முனிசிபல் ஆஸ்பத்திரிக்கு போய் குளிகை வாங்கி சாப்பிடு" என்று உபதேச மொழிகளை உதிர்த்தான்.எல்லாம் சிரித்தார்கள். விளையாட்டுத் தொடர்ந்தது.

கிருஷ்ணகாந்த்'கபடி கபடி' என்று பாடிக் கொண்டு, இரண்டு முறை எதிர் டீம் பக்கம்'யாத்திரை' போய்விட்டு வந்தான். யாரையும் அவுட் ஆக்கவில்லை.அவனும் அவுட் ஆகவில்லை.

திடீரென– வானம் சட சட வென்று கொட்டத் தொடங்கியது. கருமேகங்கள் வந்து விட்டன. சாரல் பலத்து விட்டது விளையாட்டு ரத்து ஆனது. எல்லாரும் எதிரே இருந்த வீட்டுத் திண்ணையில் ஒதுங்கி கொண்டார்கள்.

கோபாலன்தான் பெரும்பாலும் அடுத்த நாள் என்ன விளையாட்டு என்று முடிவு செய்வான். "டே! நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை, கிரிக்கட் டெஸ்ட் மாட்ச்சு வச்சுக்கலாம" என்றான். "சரிடா! சரிடா!" என்று எல்லோரும் கத்தினார்கள். இரண்டு டீமும் இரண்டு இன்னிங்ஸ் விளையாடினால் அதற்கு டெஸ்ட் மாட்ச் என்று அர்த்தம்.

“டே!” மொத்தம் பதினொரு பேர் இருக்கோம்டா என்றான் சக்தி, உடனே கோபாலன் அப்போ- ராமநாதன் நல்ல பேட்ஸ் மேன்டா, அவன் டபுள் சைடுடா! (அதாவது அவன் இரண்டு பக்கத்திற்காகவும் பேட் செய்ய வேண்டும்) – என்றான். அவன் சற்று குள்ளமானவன். என்றாலும் நீண்ட நேரம் பேட் செய்வான். நிறைய ரன்கள் எடுப்பான். –எனவே அவன் இரண்டு பக்கத்திற்காகவும் ஆட வேண்டும். இரண்டு பக்கமும் ரன் சேருமல்லவா?

அப்போதே டீம் பிரிக்கப்பட்டது. கோபாலன் A டீமின் கேப்டன். கிருஷ்ணகாந்த் B டீமின் கேப்டன். கிருஷ்ணகாந்த் டீமில் ஜுட் விட்டு விட்டுப் போன துரை, விசுவநாதன், கண்ணன் என ஐந்து பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதில் விசுவநாதன் பாஸ்ட் பௌலர். கண்ணன் ஸ்பின் பௌலர். கிருஷ்ணகாந்த் நல்ல பேட்ஸ்மேன் அல்ல. கட்டை போடுவான் கொஞ்சம் பௌலரும் அல்ல. ஓவர்கள் கிடையாது. த்ரோவும் கிடையாது. எனவே அவன் பொசிசன் சில்லி மிட் ஆப் அல்லது சில்லி மிட் ஆன்தான்… சமயத்தில் ஸ்லிப்பில் நிற்பான். பெரும்பாலும் கேட்சுகள்தவறவிடமாட்டான். ஏனவே அவனை முன்னிருத்தி ஆடுவார்கள். என்றாலும் மற்ற ஆட்டக்காரர்களுக்குப் பொசிசன் மாற்றிக் கொண்டே இருப்பான். லீடர்ஷிப் தலைமை பதவி அவனிடம் இருந்தது.

அப்போது திடீரென சக்தி “டே!”டபுள் சைடு பீல்டிங் என்று சத்தமிட்டான். அதாவது பீல்டிங் செய்யப் போதுமான நபர்கள் இல்லாததால் இரண்டு டீமும் பேட் செய்யும்போதும் எல்லா விளையாட்டு வீரர்களும் பீல்டிங் செய்ய வேண்டும். முக்கியமான பொசிசன்களுக்கு சரியான நபர்கள் கிடைப்பது கஷ்டம். தன் டீம் நபர்கள் பேட் செய்யம்போது, கேட்சுகளை மிஸ் செய்வதும், மிஸ் பீல்டிங் செய்வதும் எல்லோரும் செய்வதுதான். என்றாலும், இதனால்தான் சண்டை சச்சரவுகள் வரும். காரசாரமான விவாதங்கள் வரும்.

கிரிக்கெட் விளையாட அவர்கள் அரை மைல் (ஒரு கிமீ) துரமுள்ள ஒரு மைதானத்திற்குப் போவார்கள். கொஞ்சம் அகலமான மைதானம்தான்.என்றாலும் பிட்ச் கொஞ்சம் கரடு முரடானது. கார்க் பால் எகிறும். ஸ்டம்ப்ஸ்,பேட் எல்லாம் ராமநாதனுடையது. அவன் அப்பா வாங்கி கொடுத்திருந்தார்.

கிருஷ்ணகாந்த் மனதில் அடுத்தநாள் டெஸ்ட் மேட்சில் யார், யாரை எந்த பொசிசனில் நிறுத்த வேண்டும் என்ற கனவுகள் ஓடிக் கொண்டிருந்தன. பெரிய சுப்பிரமணி தன் விக்கட்கீப்பர் என்று முடிவு செய்து கொண்டான் அவன். விசுவநாதன்தான் ஒபனிங் பௌலர். அவன்தான் எல்லேரரைக் காட்டிலும் பாஸ்ட் பௌலர். பின் சின்ன சுப்ரமணியைப் போடச் சொல்லலாம். அவன் மீடியம் பேஸ் போடுவான் என்று திட்டமிட்டு கொண்டிருந்தான் அவன்.

மழை விட்டு விட்டது. என்றாலும் இருட்டிக் கொண்டு வந்தது. எனவே சடுகுடு விளையாட்டு பாதியில் கைவிடப்பட்டது. அப்போது சக்தி "டே! இன்னிக்கு ஊர்கோலம் போகணும் . கட்சி ஆபீஸில் சொல்லியிருக்காங்க – என்றான்

அப்போது நகராட்சி தேர்தல்கள் நடந்து கொண்டிருந்தன.12 முதல் 16 வயதான பையன்கள் அனைவரும் ஊர்கோலம் போகத் தயார் ஆனார்கள். காங்கிரஸ் - தி.மு.க -இடையேதான் போட்டி. காங்கிரஸ் ஆபீஸிற்கு சில பேரும், தி.மு.க ஆபீஸிற்கு சில நண்பர்களும் பிரிந்து சென்றார்கள். வேட்பாளர்கள் இவர்களுக்கு மிட்டாய் யெல்லாம் கொடுத்து ஊர்கோலம் போகச் சொல்வார்கள். சற்று வயதானவர்களுக்கு ஹோட்டலில் டிபன் சாப்பிட டோக்கனும் கொடுப்பார்கள்.

நண்பர்கள் " போடுங்கய்யா வோட்டு .,காளைச்சின்னம் பார்த்து" போடுங்கம்மா வோட்டு .,காளைச்சின்னம் பார்த்து என்றும், "போடுங்கம்மா வோட்டு உதயசூரியனைப் பார்த்து, போடுங்கய்யா வோட்டு - உதயசூரியனைப் பார்த்து -" என்றும் கத்திகொண்டு ஊர்கோலம் போய்வருவார்கள்.

சில நண்பர்கள், இரண்டு கட்சிக்குமே ஊர்வலம் போய் வருகின்ற பழக்கம் உள்ளவர்களாக இருந்தார்கள்.அது அவர்களுடைய 'மூடை'(mood) பொறுத்த விஷயம் -நண்பர்கள் 'செட்' சேருவதை பொறுத்த விஷயம்.

சாரல் மழை விட்டு விட்டுப் பெய்து கொண்டேதான் இருந்தது. கிருஷ்ணகாந்த் நனைந்தும், நனையாமலும் ஊர்கோலம் முடிந்து, வீடு திரும்பும் போது மணி இரவு 8 மணிக்கு மேலே ஆகிவிட்டது.

கிருஷ்ணகாந்தை வரவேற்க அவன் தந்தை வீட்டுத் திண்ணையிலேயே காத்து இருந்தார். அவனைப் பார்த்ததும் அவன் தந்தை "ஏண்டா? இப்படித் தொப்பமா நெனைஞ்சபடி வர்ரே"? கோகிலா, இங்கே வா – முதல்லே இவன் தலையைத் துண்டு எடுத்துத் துவட்டு- என்றார்.

கோகிலாஓடோடி வந்து தலையைத் துவட்டினாள். "ஏண்டா? எங்காச்சும் நின்னுட்டு வரக்கூடாதா?" கோவிந்தராசனுக்குக் கோபம். "ஏண்டா? ஒன்னை வெளக்கு வெச்சதுமே வந்துடனும்னு சொன்னேன் இல்லே, இப்ப என்னடா மணி? -" என்று கேட்டார்.

"எல்லோரும் கட்சி ஊர்கோலம் போனோம்பா" என்றான் கிருஷ்ணகாந்த். கோவிந்தராசனுக்குத் திடீரென்று கோபம் குறைந்து சிரிப்பு

வந்தது-'' "ஏண்டா! உனக்கே பதினாறு வயசுதான் ஆகுது! ஓட்டுப் போட முடியாது. "உனக்கு எதுக்குடா கட்சியும், ஊர்கோலமும்'' என்றார். எல்லோரும் போனாங்கப்ப – என்றான் கிருஷ்ணகாந்த்.

கோகிலவாணியும் சளைத்தவள் அல்ல. சிரித்துக் கொண்டே சாருக்கு – ஓட்டுப் போடற ரைட் கொடுத்தா எந்த கட்சிக்கு போடுவீங்க என்று கேட்டாள். கிருஷ்ணகாந்தும் சளைக்காமல் " சிவாஜிகணேசன் எந்த கட்சியோ அந்தக் கட்சிக்குத்தான் ஓட்டுப் போடுவேன் -'' என்றான்.

கோவிந்தராசன் -"சரி – சரி - போய் சாப்பிட்டுவிட்டுப் படி-'' என்றார். கிருஷ்ணகாந்த் வீட்டிற்குள் போனான். ஹரிக்கேன் விளக்கு எரிந்து கொண்டிருந்தது... சாப்பிடும்போது அவனுக்குத் தூக்கம் கண்ணைச் சொருகியது. இனி எங்கே படிப்பு?

# 3. கொஞ்சம் கற்பனை; கொஞ்சம் உண்மை

**வருடம் 1963-64**

கிருஷ்ணகாந்த் **S.S.L.C** பொதுத் தேர்வு எழுதியிருந்தான். இடையில் ஒரு வருடம் 'பெயில்' ஆகியிருந்தான். அவனுக்கு ஜூனியரான துரை, கோபாலன், கண்ணன் எல்லோரும் அவனோடு சம வகுப்பில் படிப்பவர்களாய் இருந்தார்கள். பொதுத் தேர்வில் வெற்றி பெற்று விடுவோம் என்கிற நம்பிக்கை கிருஷ்ணகாந்திற்கு இருந்தது.

பழைய நண்பர்களில் இப்போது துரை, கோபாலன், கண்ணன்,சக்தி, ராமநாதன்,விசுவநாதன் மட்டும் மிச்சம்.மற்றவர்கள் எல்லாம் ஊர் மாறியோ, தெருமாறியோ போய் இருந்தார்கள். புதிதாக அறிவுமதி, சக்திப்பெருமாள், ஆகியோரின் நட்பு கிடைத்திருந்தது.

அறிவுமதி கிராமத்து மனிதர். சற்று வயதானவர். அந்த சிறு நகரில் ஒரு விடுதியில்(லாட்ஜில்) தனி அறை எடுத்துத் தங்கி இருந்தார். ஒரு நிறுவனம் ஒன்றில் அவர் பணிக்குச் சென்று கொண்டிருந்தார். பட்டதாரி அவர் முருக பக்தர். நெற்றி நிறைய திருநீறுஎப்போதும் இருக்கும். தினசரி மாலை நேரங்களில் ஓரிரண்டு கவிதைகளையாவது எழுதுவார். எல்லாம் பெரும்பாலும் முருகளைப் பற்றியதாகவே இருக்கும்.

சக்திப்பெருமாளும் சற்று வயதில் மூத்தவர்தான். பட்டதாரி அல்ல. அவர் பட்டப்படிப்பை பாதியில் விட்டிருந்தார். அவர் சகோதரர் ஒரு தையல் கலைஞர். அவருக்குக் கூடமாட உதவியாக சக்திப் பெருமாளும் தையல் வேலை செய்து கொண்டிருந்தார். 'கட்டிங்' (ஒரு துணியை சரியான அளவில் துண்டாக்குவது) அவர் சகோதரர் மலைச்சாமியுடைய வேலை...,தையல் மிஷினில் உட்கார்ந்து தைப்பது, சமயத்தில் காஜா எடுப்பது,அயர்ன் செய்வது எல்லாம் சக்திபெருமாள் வேலை.

அவரும் கவிஞர், பகுத்தறிவுவாதி. இயற்கையைப் பற்றி எழுதுவார். அரசியல் கவிதைகள் எழுதுவார். பொதுவான விஷயங்கள் எழுதுவார்.

கிருஷ்ணகாந்த், துரை இவர்கள் எல்லோருக்கும் கவிதைகள் பிடிக்கும்.என்றாலும் எழுத வராது. நண்பர்கள் பெரும்பாலோனோர், தினசரி அறிவுமதியின் அறையில் சந்திப்பது வழக்கமாகிவிட்டது. இப்போது மாலை நேர விளையாட்டுக்கள் இல்லை.

கிருஷ்ணகாந்திற்கு விளையாட்டின் மீது இருந்த ஆர்வம் குறையவில்லை;பள்ளியில் கிரிக்கெட் டீமில் அவன் இருந்தான். போல்வால்ட்,

ரன்னிங்,ஹைஜம்ப்,லாங் ஜம்ப்,ட்ரிபிள் ஜம்ப் போன்ற போட்டிகளில் கலந்து பரிசு பெற்றுக் கொண்டு இருந்தான். என்றாலும் - பள்ளிப்படிப்பு அவனுக்கு வேப்பங்காய்தான்.

அந்த மாலைப் பொழுதில், கிருஷ்ணகாந்த் அறிவுமதியின் அறைக்கு வேகமாகவே வந்து சேர்ந்தான். அவனுக்கு முன்பே மற்ற நண்பர்கள் வந்துவிட்டனர்.

கிருஷ்ணகாந்தின் மனதில் வித்தியாசமான ஒரு சிந்தனை ஓடிக்கொண்டிருந்தது. அவனுக்கு **S.S.L.C** பொதுத் தேர்வில் அவன் சரித்திரப் பாடத் தேர்வு எழுதியது நினைவுக்கு வந்து கொண்டிருந்தது. அவனுக்கு படிக்கப் பிடிக்காத ஒருநாள், முன்னிரவு நடைப்பயணம் புறப்பட்டு விட்டான். அடுத்த தெரு மருதமுத்து அவன் வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்து சரித்திரம் படித்துக் கொண்டிருந்தான். அவன் பாஸ்டன் தேயிலை விருந்து பற்றி படித்துக் கொண்டிருந்தான். அமெரிக்காவில் அபரிதமான தேயிலை உற்பத்தி ஆன வருடம் - விற்பனைக்குச் சந்தையில் விலை இல்லாத நிலையில் தேயிலை – கடலில் கொண்டு போய் கொட்டப்பட்டது. இதுவே பாஸ்டன் தேயிலை விருந்து. கிருஷ்ணகாந்த் அவன் படிப்பதை கேட்டுக் கொண்டிருந்தான். அதுவும் திண்ணையில் படுத்தவாறு.

அடுத்த நாள், பொதுத் தேர்வில் சரித்திரத் தேர்வில் அதே கேள்வியாக வந்து விட்டது. – பாஸ்டன் தேயிலை பற்றிய கேள்வி. கிருஷ்ணகாந்த ஒரு பக்கத்திற்கு மேல் எழுதி விட்டான். ஆனால் மருதமுத்து அந்தத் தேர்வுக்கு பதில் எழுதவில்லை. கிருஷ்ணகாந்த் அது பற்றி மருதமுத்துவிடம் கேட்டபோது ‘‘எனக்கு மறந்து போச்சுடா!’’ என்றான் மருதமுத்து.

இந்த நிகழ்ச்சி கிருஷ்ணகாந்த் மனதில் ஒருஎண்ணத்தை தோற்றுவித்து இருந்தது. தான் என்னதான் படிப்பில் சோடையாக இருந்தாலும் தனக்குள் ஒரு அபூர்வ சக்தி இருப்பதாகஅவன் நினைத்துக் கொண்டான். இந்த சிந்தனையோடு அறிவுமதியின் அறைக்குள் நுழைந்தான். அறை அல்லோல கல்லோல பட்டுக் கொண்டிருந்தது. சக்திப் பெருமாள் ‘‘நான் இப்போது ஒரு கவிதை படிக்கிறேன், எல்லோரும் அமைதியா கேளுங்க!’’ என்றான். ‘‘படிங்க - ’’ என்றார்கள் எல்லா நண்பர்களும்.

‘‘புட்கள்’’ (பறவைகள்) எல்லாம் பறப்பதை பார் அம்மா
பூக்கள் எல்லாம் சிரித்து இருப்பதை பார் அம்மா
கட்டெறும்பு களித்து இருப்பதை பார் அம்மா;
கவியூற்று பெருக்கெடுத்து ஓடும் அம்மா ?

என்று கவிதை வரிகளைச் சொன்னார். எல்லோரும்கைதட்டினார்கள்.

அறிவுமதி ஒரு சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டான். சக்திபெருமாள் ஒரு பீடியை பற்ற வைத்துக்கொண்டான். பிறகு அறிவுமதி -

தாவியோடும் மந்திகள் இல்லையே!
தன் மணம் பரப்பும் மலர்கள் இல்லையே!
நாவினால் முருகா என்போர் நீங்கள்
ஆவியால் தொழயாருமே இல்லையே!

என்ற முருக பக்தி பாடலை பாடினார்.

பிறகு பேச்சு தொடர்ந்தது. சக்திப்பெருமாள் கவிதை இலக்கணத்தோட இருப்பது சிறப்புதான். அதுவும் வெண்பா, ஆசிரியப்பா –என்று யாப்பு இலக்கணம் வருமாறு அமையணும்.- எதுகை மோனை எல்லாம் சரியா வரனும்.ஒரு வரியிலே முதல் சீரிலே முதல் எழுத்து எதுவோஅதுவே மூன்றாவது சீரிலே முதல் எழுத்தாகவும் வரணும்…இன்னும் குற்றிலுகரம், குற்றிரலிகரம் எல்லாாம் இருக்கு. என்று பேசிக் கொண்டே போனார்.

அறிவுமதி இத்தனை ஆர்வமா இருக்கீங்க, காலேஜ் படிப்பை விட்டுட்டீங்களே –என்றார் உருக்கத்துடன். சக்தி, "என்ன செய்வது- ஏதோ கொஞ்சம் நேரமாவது. மிஷின்லே, உட்கார்ந்து மிதிச்சாதான் -நாலு காசு கிடைக்கும் -குடும்பம் நடக்கும்னு-' கூறினார். பின் பேச்சு பிறகு நாலாபக்கமும் சிதறிக் கொண்டு போனது. கிருஷ்ணகாந்த் எனக்கு ஒரு பிரச்னை இருக்கிறது என்றான். அறிவுமதியும். சக்திபெருமாளும் என்ன பிரச்னைன்னு சொல்லுங்க தீர்த்து வைக்கிறோம் என்று சொன்னார்கள்.

கிருஷ்ணகாந்த் "எனக்குத் தூக்கத்திலே அடிக்கடி கனவு வருது. இது நல்லதா? கெட்டதா? எனக்கு எதாவது நோயான்னு கேட்டான். அறிவுமதி "கொஞ்சம் யோசிப்போம்-!" என்றார். சக்திப் பெருமாள்"என்ன! பெண்களை பத்தின கனவா? என்றார்.

கிருஷ்ணகாந்த் "அப்படியும் ஒரு பிரச்னை இருக்கு… எனக்கு ஒரு அத்தை மக இருக்கா" சென்னையிலே இருக்கா கல்யாணின்னு பேரு ரொம்ப தூரத்துத் சொந்தம்தான்.. ரெண்டு மூணு தடவை இதுவரைக்கும் பேசியிருப்பேன். பொதுவான பேச்சுதான், என்றான். அவளுக்கு என் மேலே ஒரு 'இது' இருக்குற மாதிரி எனக்குத் தெரியுது என்றான்..

சக்திப் பெருமாள் உடனே உங்களுக்கு என்ன தோணுது? அந்த "இது" உங்க மனசுலேயும் தோணுதா?" என்று கேட்டார். கிருஷ்ணகாந்த்"அது

காதல்தான்னு'' உறுதியாகச் சொன்னான். அறிவுமதி ''தப்பில்லே - படிப்பைக் கோட்டை விட்டுடக் கூடாதுன்னு சொன்னார்.உடனே துரை ''எனக்கும் இந்த மாதிரி... ஒரு இது இருக்கு,'' என்றான். அறிவுமதி ''விவரமா சொல்லுங்க!'' என்றார்.துரை எனக்கும் தூரத்து சொந்தத்திலே ஒரு மாமா மக இருக்கா, விமலான்னு பேரு,.. நாங்க மனசு விட்டே பேசிப்போம்-'' ன்னு சொன்னான். சக்தி பெருமாள் வெளிப்படையாகவே உங்க காதலைப் பத்தி பேசிட்டீங்களா?'' என்றார். துரை அப்படி சொன்னமாதிரிதான் என்றான்.

''பின் அவகிட்டேயே ஒன்னை கல்யாணம் செஞ்சுக்க ஆசை இருக்குன்னு ஒரு நா சொல்லிட்டேன். அதுக்கு அவ அதெல்லாம் பெரியவங்க பேச வேண்டிய விஷயம் - நீ அதைப் பத்தியெல்லாம் பேசக்கூடாதுன்னு சொல்லிட்டு போயிட்டா...''

எல்லோரும் அமைதியானார்கள். பின் கோபாலன், கண்ணன், விசுவநாதன், ராமநாதன் எல்லோரும் இப்படி ஒரு இதுவான விஷயத்தைப் பற்றி சொன்னார்கள்.

முடிவாக சக்திப்பெருமாள் என்னை யாரும் காதலிக்க மாட்டேன்னு சொல்றாங்களே என்று சொல்லிச் சிரித்தார்.

அறிவுமதி ''அடியேன் துறவி; நான் துறவறம் பூண்டுவிட்டேன். – என் அப்பன் முருகனே எனக்கு எல்லாம்.''என்றார்.அவர் சமயங்களில் தூய தமிழில் பேசுவார்.''நீங்க ஒங்க முடிவை மாத்திக்கணும்னு'' சக்திப்பெருமாள் அறிவுமதியிடம் கூறினார். ''இனி மாற்றத்திற்கு வழியில்லை'' என்றார் அறிவுமதி.

பின் எல்லோரும் ஆளுக்கொரு பாட்டும் பாடினார்கள். கிருஷ்ணகாந்த் ''சிலர் சிரிப்பார் சிலர் அழுவார்'' என்று சிவாஜிகணேசன் பாட்டுப் பாடினான். பின் சபை கலைந்தது.

# 4. அப்படியும் ஒரு சாகசம்

வருடம் 1963 -1964

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. அறிவுமதியின் அறையில் நண்பர்கள் சபை கூடியது. முதலில் கொஞ்ச நேரம் அரசியல் பேசப்பட்டது. சக்திப்பெருமாள் தி.மு.க அனுதாபி.. அடுத்த தேர்தலில் தி.மு.க தான் ஆட்சிக்கு வரும்என்று அழுத்தம் திருத்தமாக பேசிக்கொண்டிருந்தார்.கிருஷ்ணகாந்த், ‘‘காங்கிரஸ் தோற்காது –காமராசு ஜெயிப்பார் - சிவாஜி ஜெயிப்பார்’’ என்று வாதாடினான்.

அறிவுமதி, கொஞ்சம் அரசியல் வாத –பிரதிவாதங்களை நிறுத்திப்போம்’’ வேறு ஏதாவது பேசுவோம் -’’ என்றார். எல்லோரும் அமைதியானார்கள்.

‘‘துரை நான் ஒரு பிரச்னையைப் பேசறேன்-;’’ என்றான் . அறிவுமதி சரி சொல்லுங்கள் என்றார். ‘‘உண்மையிலேயே பேய், பிசாசு,பூதம், காட்டேரி -’’ இது எல்லாம் இருக்கா? அதெல்லாம் உண்மையா? என்றான்.

உடனே கிருஷ்ணகாந்த். ‘‘எனக்கு ஒரு எக்ஸ்பீரியன்ஸ் இருக்கு’’! ஒரு தடைவ இந்திப்படம் பார்த்துட்டு வந்தேன். ராத்திரி படுத்தா தூக்கமே வரலே. கிணத்துக்கு பின்னாலே – சலங்கைச்சத்தம் கேட்டுட்டே இருந்துச்சு. என்றான். கிணத்துப்பக்கம் போய் பாத்தீங்களா? என்றார் சக்திப்பெருமாள்.‘‘பயமா இருந்தது – போகலை’’ என்றான் கிருஷ்ணகாந்த்.

அறிவுமதி எழுந்து– அலமாரியிலிருந்து திருநீற்றுப் பொட்டலத்துடன் வந்தார். கிருஷ்ணகாந்தின் நெற்றியில் கொஞ்சம் திருநீற்றை வைத்தார். ‘‘பயப்படாதீங்க – எல்லாம் சரியாயிடும். என் அப்பன் முருகன் இருக்கிறார்.-’’ என்றார் சக்திபெருமாள்-’’ பேய், பிசாசு, பூதம், -எதுவுமே இல்லே. எல்லாமே மனப்பிராந்தி என்று சொன்னார். ‘‘எப்படிக் கண்டுபிடிக்கிறது-’’ என்று கேட்டான் கிருஷ்ணகாந்த்.

‘‘தோ –நா ஒன்னு சொல்றேன்! இன்னிக்கு ராத்திரி சரியா12 மணிக்கு நாம எல்லோரும் சுடுகாட்டுக்குப் போறோம். அங்கே ஏதாவது பிணம் எரிஞ்சுட்டே இருக்கும். போய் பார்த்துட்டு வற்றோம். பக்கத்திலேயே போயி

நிக்கறோம். ஓங்க மனசுல இருக்கிற பேய், பிசாசு, பூதம், ... பயம் எல்லாம் ஓடிடும். ‘‘இப்படி பல தடவை நான் போய் பார்த்திருக்கிறேன்’’ என்றார்.

அறிவுமதி உட்பட எல்லோரும் சம்மதித்தார்கள். அன்று இரவு 11 மணிக்க எல்லாம் நண்பர்கள் எல்லாரும் அறிவுமதியின் அறையில் கூடியிருந்தார்கள். எல்லாம் அவர் அவர்கள் வீட்டில் இரண்டாம் ஆட்டம் சினிமாப் பார்த்து வருவதாகச் சொன்னார்கள். பின் எல்லாரும் சுடுகாட்டுக்கு நடந்து சென்றார்கள். அறிவுமதி கிருஷ்ணகாந்தைப் பார்த்து ஒரு சிகரெட் பத்த வச்சுக்கோங்க. கிருஷ்ணகாந்த் சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டான். ஒரே இருமல் வந்தது. தூக்கி எறிந்துவிட்டான்.அதைப் பார்த்து துரை, கோபாலன், கண்ணன் எல்லோரும் தங்களுக்குச் சிகரெட் வேண்டாம் என்று கூறிவிட்டார்கள். சுடுகாட்டை நெருங்கி விட்டார்கள். முன்னாலே காம்பவுண்டு சுவரை ஒட்டியே நுழைவு வாயில் மண்டபம்’ அங்கே ஏதோ ஒரு பைத்தியகாரன் மட்டும் உட்கார்ந்து தன்னப்போல பேசிக் கொண்டிருந்தான். அவன் ‘‘அல்லா – பெல்லா பிஸிபெல்லா என்று கத்தினான். பின் யார் யாரையோ கண்டபடி வசவு பாடினான். சிரித்தான் திடீரென்று ‘‘உலகம் பிறந்தது எனக்காக’’ என்று பாடினான்.

நண்பர்கள் அனைவரும் தூரமாக நின்று அவன் என்ன செய்கின்றான் என்று பார்த்து கொண்டிருந்தார்கள்.பின் சுடுகாட்டுக்குள் சென்றார்கள். அப்போது ஒரு ஜாமக் கோடங்கி ஜக்கம்மா - ஜக்கம்மா என்று சொல்லிக் கொண்டு வருவது தெரிந்தது. ஒரு பிணம் தூரத்தில் எரிந்தது தெரிந்தது. வெட்டியானோ யாரோ அதன் அருகில் நிற்பது தெரிந்தது. எரியும்போது பிணம் எழுந்தால் தன் கையில் உள்ள தடியால் அடிப்பான். அது அவன் வேலை. நண்பர்களுக்கு அங்கு இருக்கப் பிடிக்கவில்லை.எல்லாரும் பயமில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். பின் அறிவுமதியின் அறைக்குத் திரும்பி விட்டார்கள்.

சக்திப்பெருமாள் இரவு முழுவதும் தூங்கவில்லை. சிகரெட் மாற்றி பீடி – பீடி மாற்றி சிகரெட் என்று குடித்துக் கொண்டே இருந்தார்.அறிவுமதி ஒரு முறை குளித்துவிட்டு வந்து பக்கமாய் பக்கமாய் எழுதித்தள்ளினார்.

கிருஷ்ணகாந்திற்கு ஒன்றுமே புரியவில்லை. மனசுக்குள் உண்மையில் பேய்கள் இருக்கன்றனவா? இல்லையா என்று கேட்டுக் கொண்டான் அவன். அவனால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை.

# 5. வெற்றி எப்போதும் அருகில் இல்லை

வருடம் 1966-67

படிப்பைப் பொறுத்த அளவில் கிருஷ்ணகாந்த் ஒரு முடிவுக்கு வந்து விட்டான். இப்போது அவன் பட்ட வகுப்பு மாணவன்.B.com படித்துக் கொண்டிருந்தான். Accountancy, Book keeping, Company Law, Economics என பாடங்கள் விரிந்தன. கிருஷ்ணகாந்திற்குப் பெரிய ஆர்வம் பாடத்தில் ஏற்படவில்லையென்றாலும், கல்லூரிப் பாடங்களில் - தேர்வுகளில் தோற்றுவிடக் கூடாது என்பதில் உறுதியாய் இருந்தான். எனவே கடுமையாய் உழைக்கவும் செய்தான்.

அவனுடைய ஆர்வம் எல்லாம் விளையாட்டாய் இருந்தது.எல்லா – ஞாயிற்றுக்கிழமைகளிலும் - அவனுக்கு காலை முதல் மாலை வரை மைதானமே வீடு. கிரிக்கெட்., கிரிக்கெட்., கிரிக்கெட்தான் உலகம் அதுவே எல்லாம். கடுமையான முயற்சிகள் எடுத்துக்கொண்டான் கிருஷ்ணகாந்த். எந்த "த்ரோவில்" அவன் பலவீனமாக இருந்தானோ, அதை பலப்படுத்திக் கொண்டான். இப்போது அவன் பவுண்டரி லைனில் இருந்து, பிட்ச் வரை ஸ்டம்ப் வரை பந்தை த்ரோ செய்ய முடியும். என்றாலும் அவன். Expertise...... செய்துகொண்டு இருந்து, கல்லி, சார்ட் மிட் ஆப், சார்ட் ஸ்கொயர் லக்-பொஸிசன்களில்தான்., சிலிப் கூட இரண்டாம் பட்சம்தான். சற்று உயரமாகத் தூக்கி அடிக்கப்படாமல், ஒரு நடுத்தர வயதுடைய மனிதின் வயிற்றின் அளவிற்கு மிக வேகமாக "கட்" செய்து அனுப்பும் பல பந்துகளை தாவிப்பிடித்து, அப்படியே தரையோடு சுருண்டு விழுவது, 'காட்ச்' செய்வதில் அவன் திறமையாக இருந்தான்.

பேட்டிங்கைப் பொறுத்த அளவில் ரைட் சைடை விட அவன்லெக்சைடில். ஸ்ட்ராங்காகப் பேட் செய்தான். உயரமாக வரும் பந்துகளையும், தாழ்வாக வரும் பந்துகளையும், Sweep செய்து பேட் செய்வது அவனுக்கு சுலபமாக இருந்தது. ஸ்கொயர் லெக்கிலோ, டீப் ஸ்கொயர் லெக் - பொசிசினிலோ,பீல்டர்கள் பொசிசன் பார்த்து அவன் பவுண்டரி ஷாட்டுகளை அடித்துக் குவிப்பான். லாங்ஆன், லாங் ஆப் அவனுக்கு அத்துப்படியாக இருந்தது.

ஆனால் கிருஷ்ணகாந்தைப்போன்று அவன் நண்பர்கள துரை, கண்ணன், கோபாலன், விசுவநாதன் ஆகியவர்களுக்கு கிரிக்கெட்டில் ஆர்வம் இல்லை .

# 5. வெற்றி எப்போதும் அருகில் இல்லை

வருடம் 1966-67

படிப்பைப் பொறுத்த அளவில் கிருஷ்ணகாந்த் ஒரு முடிவுக்கு வந்து விட்டான். இப்போது அவன் பட்ட வகுப்பு மாணவன்.B.com படித்துக் கொண்டிருந்தான். Accountancy, Book keeping, Company Law, Economics என பாடங்கள் விரிந்தன. கிருஷ்ணகாந்திற்குப் பெரிய ஆர்வம் பாடத்தில் ஏற்படவில்லையென்றாலும், கல்லூரிப் பாடங்களில் - தேர்வுகளில் தோற்றுவிடக் கூடாது என்பதில் உறுதியாய் இருந்தான். எனவே கடுமையாய் உழைக்கவும் செய்தான்.

அவனுடைய ஆர்வம் எல்லாம் விளையாட்டாய் இருந்தது.எல்லா – ஞாயிற்றுக்கிழமைகளிலும் - அவனுக்கு காலை முதல் மாலை வரை மைதானமே வீடு. கிரிக்கெட்., கிரிக்கெட்., கிரிக்கெட்தான் உலகம் அதுவே எல்லாம். கடுமையான முயற்சிகள் எடுத்துக்கொண்டான் கிருஷ்ணகாந்த். எந்த “த்ரோவில்” அவன் பலவீனமாக இருந்தானோ, அதை பலப்படுத்திக் கொண்டான். இப்போது அவன் பவுண்டரி லைனில் இருந்து, பிட்ச் வரை ஸ்டம்ப் வரை பந்தை த்ரோ செய்ய முடியும். என்றாலும் அவன். Expertise...... செய்துகொண்டு இருந்து, கல்லி, சார்ட் மிட் ஆப், சார்ட் ஸ்கொயர் லக்-பொஸிசன்களில்தான்., சிலிப் கூட இரண்டாம் பட்சம்தான். சற்று உயரமாகத் தூக்கி அடிக்கப்படாமல், ஒரு நடுத்தர வயதுடைய மனிதின் வயிற்றின் அளவிற்கு மிக வேகமாக “கட்” செய்து அனுப்பும் பல பந்துகளை தாவிப்பிடித்து, அப்படியே தரையோடு சுருண்டு விழுவது, ‘காட்ச்’ செய்வதில் அவன் திறமையாக இருந்தான்.

பேட்டிங்கைப் பொறுத்த அளவில் ரைட் சைடை விட அவன்லெக்சைடில். ஸ்ட்ராங்காகப் பேட் செய்தான். உயரமாக வரும் பந்துகளையும், தாழ்வாக வரும் பந்துகளையும், Sweep செய்து பேட் செய்வது அவனுக்கு சுலபமாக இருந்தது. ஸ்கொயர் லெக்கிலோ, டீப் ஸ்கொயர் லெக் - பொசிசினிலோ,பீல்டர்கள் பொசிசன் பார்த்து அவன் பவுண்டரி ஷாட்டுகளை அடித்துக் குவிப்பான். லாங்ஆன், லாங் ஆப் அவனுக்கு அத்துப்படியாக இருந்தது.

ஆனால் கிருஷ்ணகாந்தைப்போன்று அவன் நண்பர்கள துரை, கண்ணன், கோபாலன், விசுவநாதன் ஆகியவர்களுக்கு கிரிக்கெட்டில் ஆர்வம் இல்லை .

கிருஷ்ணகாந்த் பந்தினை சுவற்றில் அடித்து அடித்து, (ப்ராக்டீஸ்) பயிற்சி செய்வான். அங்கு அமா்ந்து பாட்டிற்கு சீசனிங்செய்வான். எண்ணெய்யை ஊற்றி ஊற்றி சுவற்றில் பந்தை அடித்து அடித்து பாட்டிற்கு வலுவூட்டுவான்., கிருஷ்ணகாந்த், சில சமயங்களில் கிருஷ்ணகாந்தின் தந்தை கோவிந்தராசன் கூட அவனுக்காக பௌலில் போடுவார். அந்த நடைபாதை மைதானத்தில் பௌலிங் ஆக்சன் இல்லாமல்.பந்தினை ஒரு பிட்ச் செய்து எகிறச்செய்தாலும் அதிலேயே பாஸ்ட், ஸ்பின், பவுன்ஸ் - எல்லாம் செய்து காட்டுவார் அவர்.

இத்தகைய சூழ்நிலையில் கிருஷ்ணகாந்தின் மனம் ஒரு துள்ளலுடன் இருந்தது.

அது ஞாயிற்றக்கிழமை கிருஷ்ணகாந்த் அதிகாலையில் எழுந்து, குளித்துவிட்டு நெற்றியில் சிறிய விபூதிக் கீற்று வைத்துக்கொண்டு தயார் ஆனான்.8.30 மணிக்கு கல்லூரிக்கு சென்றுவிட்டான் கிருஷ்ணகாந்த். ஒன்பது மணிக்கெல்லாம் விளையாட்டு வீரர்கள் எல்லாம் கூடிவிட்டனர். ‘டீம்’ அமைத்து விளையாடவில்லை. நெட் (வலைப்பயிற்சி) பிராக்டீஸ்தான் ஓய்வில்லாத பயிற்சி.

எல்லோரும் P.T. Professor ன் வருகைக்காக காத்திருந்தனர். அடுத்த வாரம் மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையே ஆன லீக் போட்டிகள் துவங்க இருந்தன. அவர்களுடைய M.G. கல்லூரியின் அணி அன்று அறிவிப்பதற்காக விளையாட்டு ஆசிரியர் (P.T. Professor) சொல்லி இருந்தார். எனவே முப்பது மாணவர்களுக்கு மேல் மைதானத்தில் குவிந்து இருந்தார்கள்.Net Practice செய்து கொண்டிருந்தார்கள். இரண்டுஇடங்களில் பயிற்சி நடந்து கொண்டு இருந்தது.

சரியாக 11 மணி இருக்கும். P.T. Professor வந்துவிட்டார். ஒரு மரத்தின் அடியில் எல்லோரும் கூடினார்கள். சிலர் தரையிலேயே அமர்ந்து கொண்டனர். ஓரமாக சிலர் நின்று கொண்டனர். அமைதி. சிமெண்ட் கலர் பேண்டும்,வெள்ளை நிற T சர்ட்டும் அணிந்திருந்த P.T. Professor வேலாயுதன், கல்லூரியின் கிரிக்கட் டீமை படிக்க ஆரம்பித்தார். எங்கும் நிசப்தம்.

செபாஸ்டியன், கேப்டன் . அரவிந்தன் வைஸ் கேப்டன். மனோகரன்,வைகுண்டசாமி, அர்னால்டு,முகமது அலி (விக்கெட் கீப்பர்), சண்முகநாதன், வைத்தீஸ்வரன், ராமசாமி, காசி, - பதினொரு பேர் ரிசர்வ்ஸ் மாரிமுத்து, மகுடேஸ்வரன், பஞ்சலிங்கம் என அணியில் உள்ளோர் பெயர்களை படித்தார். எல்லாரும் கைதட்டினார்கள். கிருஷ்ணகாந்த் பெயர்

இல்லை. மிகவும் சோர்ந்து விட்டான் கிருஷ்ணகாந்த். தனக்கு எப்படியும் டீமில் இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் கிருஷ்ணகாந்த் .ஆனால் ஏமாற்றமே மிச்சம்.

மாணவர்கள் கொஞ்ச நேரம் சலசலவென்று பேசிக் கொண்டிருந்தார்கள்.'பெஸ்ட் ஆப் லக்' எனறு சொல்லிவிட்டு P.T. மாஸ்டர் போய்விட்டார். இனி டிபார்ட்மெண்ட் நோட்டீஸ் போர்டில் (டீம் லிஸ்டை) - அணிப்பட்டியலை போட்டுவிட்டு, அவர் போய்விடுவார்.பத்து, பதினைந்து மாணவர்கள் மைதானத்தை விட்டுப் போய்விட்டார்கள்.

ஒருபதினைந்துபேர் மட்டும் இருந்தார்கள். அவர்கள் வலைப் பயிற்சியைத் துவக்கி விட்டார்கள்.அவர்களில் கிருஷ்ணகாந்தும் ஒருவன்.

அன்று முழுவதும் கிருஷ்ணகாந்த் சற்று மனத்தளர்ச்சியுடன்தான் இருந்தான்.வீட்டில் தன் தந்தையிடம் தனக்கு டீமில் இடம் கிடைக்கவில்லை என்று சொன்னான் அவன். பரவாயில்லை விடு- அடுத்த வருடம் கிடைக்கட்டும் என்றார் அவர்.

இரவு முழுவதும் துவண்டு விட்டிருந்த கிருஷ்ணகாந்த், அடுத்த நாள் காலை 9.00 மணிக்கு உடற்பயிற்சிக்கு சென்று விட்டான். 9.45க்குத்தான் கல்லூரி துவங்கும். 9.15க்கு உடற்பயிற்சி ஆசிரியர் வேலாயுதம் வந்துவிட்டார். அவர் அறைக்குள் கிருஷ்ணகாந்த் நுழைந்தான். "என்ன கிருஷ்ணகாந்த் -" என்றார் அவர். "சார் - என்பேர் கிரிக்கெட் டீமிலே இல்லையே சார்..ரொம்ப ஏமாற்றம இருக்கு சார் -" என்றான் கிருஷ்ணகாந்த்.

"அதுவா-" கொஞ்சம் சிரித்தார் வேலாயுதம். "நீங்க லெக் சைடுலே நல்லா பேட் செய்யறீங்க.. ஆனா ஆப் சைடுலே வீக்" ஆப் ஸ்டம்புக்கு நேரா முழங்கால் உயரத்திற்கு மேலே வந்த பந்தை, காலை மடக்கி உட்கார்ந்து, ஸ்கொயர் கட் பண்ணனும். உங்களுக்கு அது தெரியவே இல்லை" அவுட் சைட் ஆப் ஸ்டம்பிலே வந்த பந்தை 'சேஸ்' பண்ணி ஸ்லிப்புக்கு 'கேட்சு' தர்றீங்க. உங்க இன்னிங்ஸ் கன்ஸிஸ்டன்சியா (நம்பகமா ) இல்லை.பௌலிங் வீக்தான். இம்ப்ரூவ் பண்ணனும். லெக் ஸ்டிக்குக்கு நேராக முழங்கால் உயரத்திற்கு பௌலிங் பண்றீங்க. Swing இல்லே - பேட்சுமேனுக்கு ரொம்ப வசதியாப் போச்சு. ஸ்கொயர் லெக் பக்கம் தூக்கி அடிக்கிறீங்க. பந்து காத்திலே Swing ஆகனும். அப்பத்தான் பாட்ஸ்மேன் ஏமாறுவான். இதெல்லாம் நீங்க இம்ப்ரூவ் பண்ணவேண்டிய விஷயம். ஆதனாலே டீம்லே ஒங்க பேரு இல்லையேன்னு கவலைப்பட வேண்டாம். இட் இஸ் நேச்சுரல். பெஸ்ட் ஆப்தி லக்நெக்ஸ்ட் டைம் என்றார்.

கிருஷ்ணகாந்த் ஒன்றுமே பேசவில்லை. ‘‘தேங்யூ சார்’’என்று சொல்லிவிட்டு வகுப்பறை நோக்கி நடந்தான்.

P.T. Professor என்னதான் எடுத்துச் சொன்னாலும், அதில் உண்மை இருக்கறது என்றாலும் Reserve hand ஆகாவாது தன்னை சேர்த்துக் கொண்டிருக்கலாம் என்றுஅவன் நினைத்தான். அவனுடைய ஒவ்வொரு பீல்டிங் மூவ்மெண்டும், வேகமும் -பலசமயம் பார்வையாளர்களிடையே கைதட்டல்களைமுழங்கியதை அவன் நினைவு கூர்ந்தான். ஆட்டம் முடிந்தபின் கூட சில நண்பர்கள் வந்து பாராட்டியதை நினைவுகூர்ந்தான். தனக்குத் தரப்பட வேண்டிய வாய்ப்புத் தரப்படவில்லை. மறுக்கப்பட்டதுஎன்பதே அவன் எண்ணம்.

## 6. கடவுள் யார் கட்சி

வருடம்1966-1967

அறிவுமதியின் அறையில் எப்போதும்போல் சபை கூடிக்கொண்டிருந்தது. கிருஷ்ணகாந்த் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அங்கு செல்வான் . அன்றுஅறிவுமதி, சக்திப்பெருமான், துரை, கண்ணன், கோபாலன் ஆகியோர் அறையில் பேசிக்கொண்டிருந்தார்கள். அதிசயமாக அறிவுநம்பியும் அங்கு இருந்தார். அறிவுநம்பி அங்கு அதிகம் வராத நண்பர். கல்லூரி வளாகத்தோடு அவரது பழக்கமும் நட்பும் முடிந்துவிடும். அன்று துரை அவரை அங்கே அழைத்து வந்து இருந்தான்.

அப்போது திருவிளையாடல் படம் Second Run ஆக வந்து இருந்தது."அந்தப் படத்திலே சிவாஜிகணேசன் தன் நடிப்பாற்றலை மிக அற்புதமாக வெளிப்படுத்தியிருக்கிறார். ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு அற்புதம்தான். "" என்று சொன்னார் அறிவுமதி. "பாட்டும் நானே; பாவமும் நானே," பாட்டு சீன்லே மிருதங்கம் வாசிக்கிறமாதிரி, வீணை வாசிக்கிறமாதிரி, அப்பா என்ன நடிப்பு அது?! என்றார். உடனே துரை "ஏன்- பார்த்தா பசு மரம்; படுத்துவிட்டா நெடுமரம்-பாட்டு சீன்லே மட்டும் என்ன குறைச்சல்.,அவருடைய முதுகு எப்படிக் குலுங்கி ஆடுது-?ன்னு கேட்டார்.உடனே கோபாலன் "வசன உச்சரிப்பு எல்லாம் எப்படி. அவரும் தருமி நாகேஷும் பேசற கோவில் சீன் ஒன்று போதுமே-வசனமும் நல்லாத்தான் இருக்கு" இன்னொருக்கா அந்தப் படத்தைப் பாக்கணும்... என்றான். கிருஷ்ணகாந்திற்குத் தன் அபிமான நடிகரை எல்லோரும் புகழ்ந்தது மிகவும் மகிழ்ச்சியை தந்தது. எல்லோரும் கொஞ்சம் அமைதியானார்கள். திரும்பவும் சக்திப்பெருமாள் சிவாஜிகணேசன் 'ப" வரிசை படங்களை நினைவு கூர்ந்தார். பாசத்தை எப்படி எடுத்துச் சொன்ன கதைகள் அவை என்றார். பின்னர் "கர்ணன்" படத்தை எடுத்துக்கோங்களேன்........." என்று ஆரம்பித்தார். அப்போது அன்புநம்பி குறுக்கிட்டார். " சிவாஜிகணேசன் நல்ல நடிகர்; அவருடைய ஒவ்வொரு படமுமா எடுத்துப் பேசறது இருக்கட்டும். நான் இப்போ ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கிறேன். நீங்க எல்லாரும் திருவிளையாடல் படத்தில் வர்ற மாதிரி கடவுள் இருக்கிறார்னுநெனைக்கறீங்களா? அவருக்கு உருவம் இருக்கா?அவர் மனுசனோட மனுசனா வந்து கலந்து பேசுவாரா? நீங்க எல்லாம் இதை எல்லாம் நம்பறிங்களா?அது வெறும் சினிமா... அது வெறும் கதை...என்றார். அறிவுமதி இடைமறித்து "நா அப்படி நெனைக்கலே... அது கதையல்ல .சிவபெருமானுடைய திருவிளையாடல் எல்லாம் நடந்த உண்மை..."

என்றார்.அதை அன்பு நம்பியும் சக்தி பெருமாளும் ஏற்றுக் கொள்ளவில்லை.பின்பு அன்புநம்பி தொடர்ந்தார்... அது சிவபெருமானோ, வேறே யாரோ இருக்கட்டும்- கடவுள் யார் -அவர்தான் முதன்முதல் தோற்றமா? என்றார்.''ஆமாம் -''அவன்தான் படைத்தான்-என்றார் அறிவுமதி.''அப்படீன்னா கடவுளைப் படைத்தது யார்? அன்புநம்பி'' அவரே முழுமுதல்-அவருக்கு தோற்றமும் இல்லே –மறைவும் இல்லே-'' என்றார் அறிவுமதி. ''அதெப்படி தோற்றமும் இல்லாம, மறைவும் இல்லாம எப்படி ஒன்றுஇருக்கமுடியும். ஒருத்தரு தோற்றுவிக்காம ஒன்று எப்படி தோன்றியிருக்க முடியும்?- அறிவுக்கு பொருத்தமா இல்லே-'' என்றார். அன்புநம்பி.

அறிவுமதி அவர் அறிவுக்கு எட்டமாட்டார்; உணர்வுக்கு எட்டுவார் ;உணர்ந்து பாருங்கள் தெரியும்-'' என்றார், அன்புநம்பி''எனக்கு இதிலே எல்லாம் நம்பிக்கையே ஏற்படவே இல்லை-'' என்றார். ''நம்பறதும் நம்பாததும் உங்க இஷ்டம்;நா நம்பறேன். எனக்குக் கடவுள் இருக்கிறார்.-'' என்றார்.

உடனே சக்திப்பெருமாள் குறுக்கிட்டு ''இந்த விவாதம் இருக்கட்டும், அறிவுமதி சிறந்த கவிஞர். மரபோட இலக்கணம் தெரிஞ்சவர் நானும்கவிதை எழுதறேன். எங்களை இணைப்பது இதுதான். தமிழில் நீங்கள் ஆர்வமா இருக்கீங்க...நல்லா –பேசறீங்க அடிக்கடி வாங்க-'' என்றார்.

அன்புநம்பி –''சரி- வருகிறேன் இப்போ எனக்கு நேரமாச்சு; புறப்படறேன்'' என்று புறப்பட்டார். அனைவரும் விடை கொடுத்தனர்.

கிருஷ்ணகாந்திற்குஅவர்கள் பேசியது புரிந்த மாதிரியும் இருந்துது; புரியாத மாதிரியும் இருந்தது. அவன் எதுவுமே பேசவில்லை – அவனது கிரிக்கெட் கவலைகளை மறந்து அமர்த்து இருந்தான்.

சக்திப்பெருமாள் மீண்டும் பேச்சை ஆரம்பித்தார். ''நம்ம விஷயத்துக்கு வருவோம்'' அறிவுமதி சார் -உங்களுக்கு இப்போ என்ன வயசு'' என்றார். 23 முடிஞ்சு 24 ஆகப்போகுது. உங்களுக்கு நான் ஆறு வயது மூத்தவன். அதிருக்கட்டும் சார் நீங்க ஏன் இன்னும் கல்யாணத்தை தள்ளிப் போடறீங்க ஊர்லே உங்களுக்கு நிலபுலன் இருக்கு கை நிறைய சம்பாதிக்கிறீங்க எதுக்குத் துறவு, கிறவுன்னு வாழ்க்கையை வீண் பண்றீங்க... சீக்கிரமா நீங்க கல்யாணம் பண்ணக்கிறது நல்லதுன்னு நான் நெனைக்கிறேன..,'' என்றார்.

அறிவுமதி ''எனக்கு அந்த எண்ணமே இல்லை – என்றார். சக்திப்பெருமாள்கூட யோசிக்காமல்'' ஏங்க ஒடம்புக்கு ஏதாச்சும் சரியில்லையா என்றார்?'' அறிவுமதி புன்னகைத்தார். ''எனக்கு மனசுலே ஒடம்பிலே எந்தக் குறைவும் இல்லே- கடவுள் என்னை நல்லாவே

படைச்சிருக்கிறார். எனக்குத் திருமணம் வேண்டாம்னு தோணுது அவ்வளவுதான்.

சக்திப் பெருமாள் "எனக்கு ஒங்க வயசுதான் ஆறது. எனக்கு வீட்டிலே பொண் பார்த்துட்டு இருக்காங்க" என்றார்."நல்லது" என்றார் அறிவுமதி.

பின்பு அறிவுமதி துரையைப் பார்த்து, "போன வாரம் ஊருக்கு போயிட்டு வந்தீங்களே. உங்க மாமா மக விமலாவைப்பத்தி சொல்லியிருக்கீங்க – எனக்கு ஞாபகம் இருக்கிறது. –அப்புறம் சந்தித்தீர்களா?" துரை, பார்த்தேன், பேசினேன் அவளும், எனக்கும் சம்மதம்தான், ஆனா நீங்க படிப்பை முடிச்சு வேலைக்குப் போனதற்கு அப்புறம் மத்ததெல்லாம் பேசிக்கலாம்னு சொல்லிட்டா என்றார். "அப்போ இன்னும் ரெண்டு வருஷம் இன்னும் நகரணும் - நாளு நகரமாட்டேங்குது இல்லையா?" என்றுகேட்டார் எல்லோரும் சிரித்தார்கள். அறிவுமதி-"அது காலம் ஓடிவிடும் -என்றார்,"

கொஞ்சம் அமைதியானது.பின் அறிவுமதி கிருஷ்ணகாந்தைப் பார்த்து "ஒங்க விஷயம் என்னாச்சு. ஒங்க அத்தை மக என்ன சொல்றா? என்று கேட்டார். "அது அப்படியே இருக்கு நான் பார்க்கவும் இல்லே; பேசவும் இல்லேன்னு" என்று கூறினான்.

அறிவுமதி "சரி - கடவுள் உங்க கட்சியிலே இருக்கிறார். உங்களுக்கு எந்தக் குறைவும் வராது. எல்லாம் உங்க இஷ்டப்படி நடக்கும் என்று சொல்லிக் கொஞ்சம் திருநீறு கொடுத்தார். அப்போது அவர்களில் ஒரு வித்தியாசம் தெரிந்தது—அதைப் புரிந்து இருப்பது போலவும், அதே சமயம் கூர்மையாக இருப்பது போலவும், அதே சமயம் தீட்சண்யமாய் இருப்பது போலவும், இருந்தன.

கிருஷ்ணகாந்த் அமைதியானான். சபை கலைந்து விட்டது. எல்லோரும் வீடு திரும்பிவிட்டனர்.

கிருஷ்ணகாந்திற்குக் கடவுள் தன் பக்கம் இருக்கிறானா? இல்லையா என்கிற கேள்வி மனதில் எழுந்தது. தன்னுடைய கனவுகள் எல்லாம் பலிக்குமா .தன்னுடைய திறமைகள் வெளிப்பட்டுத் தான் ஒரு கிரிக்கெட் வீரன் ஆவேனோ? அல்லது தனது திறமைகள் ஒடுக்கப்பட்டு அழிந்து போகுமா? என்கிற கேள்வி அவனுள் எழுந்தது.

# 6. உறவு வரும் - ஒருநாள் பிரிவு வரும்

வருடம் 1968-1969

அது ஒரு சாதாரண திருமண மண்டபம். அங்கு ஒரு திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. அந்த மாலை நேரத்து கதாநாயகன் பெயர் சக்திப்பெருமாள். அவன் மனைவி பெயர் ராதா.

முதல்நாள் காலையில் பழனியில் ஒரு 'சத்திரத்தில் கல்யாணம் நடந்தது. இன்று வரவேற்பு சக்திபெருமாள் சகோதரர் கொஞ்சம் அரசியல் சார்புடையவர். எனவே கூட்டம் அதிகமாக இருந்தது. ~~போவோரும்~~, போவோரும், அமர்ந்து இருப்போரும், நின்று கொண்டிருப்போரும் - பேசிக்கொண்டிருந்ததால் ஒரே சத்தமாக இருந்தது. மண்டபத்தின் வெளியே நுழைவு வாயிலில் ஒரு சிறிய ஹால். அங்கே ஒலிபெருக்கி வேறு பொருத்தி இருந்தார்கள்.

அது 'சிவந்த மண்' படம் வெளிவந்து வெற்றி அடைந்த கொண்டிருந்த காலம். எனவே அந்தப் படத்தின் பாடல்கள் ஒலிபெருக்கியில் திரும்ப திரும்ப வைக்கப்பட்டது. கிராமபோனில் இசைத்தட்டு, சுழன்று சுழன்று ஓட, ஊசிமுனை பாடிக்கொண்டிருந்தது "ஒரு ராஜா ராணியிடம் -வெகு நாளாக என்ற பாட்டிலும், பட்டத்துராணி பார்க்கும் பார்வை ஒரு வெற்றிக்குத்தான் என எண்ண வேண்டும்-" என்ற பாடலும் திரும்ப திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தது.

நண்பர்கள் கிருஷ்ணகாந்த், துரை, கண்ணன், கோபாலன்,விசுவநாதன் ஆகிய அனைவரும் வரவேற்பிற்கு வந்திருந்தார்கள். அவர்கள் அனைவரும் சக்திப்பெருமாளைப் பார்த்து தங்களுது பரிசுப் பொருளைக் கொடுத்துவிட்டு இருந்தார்கள்.

கிருஷ்ணகாந்த், ஒரு மேஜை விளக்கைப் பரிசாக கொடுத்து இருந்தான். துரை, ஒரு கேமராவைப் பரிசாக கொடுத்து இருந்தான். கோபாலன் பிளாஸ்க்கையும், கண்ணன், ஒரு மேஜை கடிகாரத்தையும், விசுவநாதன் சில புத்தகங்களையும் பரிசாக அளித்து இருந்தனர்.

அனைவரும் சிற்றுண்டியும் உண்டு முடித்திருந்தார்கள். சிற்றுண்டி எளிமையாய் செய்திருந்தார்கள். எங்குமே ஆடம்பரம் இல்லை.

ஒலி பெருக்கி சத்தம் அதிகமாகக் கொண்டே இருந்தது. மடக்கு இரும்பு நாற்காலியில் அமர்ந்து நண்பர்கள் பேசிக்கொள்ள முடியவில்லை. பாட்டுச்சத்தத்திலே ஒண்ணும் பேச முடியலே. கொஞ்ச தூரம் நடந்து

போயிடுவோம்.ஒரு மணி நேரம் கழித்து வருவோம் கூட்டமும் குறைஞ்சிடும் . சக்திப் பெருமாள்கிட்டேயும் நாம் பேசிட்டு நாம் விட்டுக்கு போவோம் என்றான். அப்போது மணி முன்னிரவு ஏழு.

அனைத்து நண்பர்களும் சரி என்றார்கள். நண்பர்கள் ஒரு கிலோ மீட்டர் பேசிக் கொண்டே போய்விட்டார்கள். இப்போது பாட்டுச்சத்தம் இல்லை . ‘‘துரை இப்போது ப்ரியாகப் பேசலாம். என்று பேச்சை ஆரம்பித்தான்.அவன் கிருஷ்ணகாந்தைப் பார்த்து– எப்படியோ இந்த வருடம் காலேஜ் கிரிக்கெட் டீமிலே உன்னை சேர்த்துட்டாங்க; ஆல் தி பெஸ்ட். நல்லா விளையாடு பிராக்டீஸ்பண்ணு . ஆனா படிப்பைக் கோட்டை விட்டுவிடாதே. ஒரு ஞாயிற்றுக்கிழமை கூட ஒன்னைப் பார்க்க முடியலே.., நாங்க எல்லாம் ஜாலியா இருக்கோம். நெறையவே சினிமா பார்க்கிறோம்.’’ என்றான்

‘நானும் சினிமா பார்க்கிறேன்’என்றான் கிருஷ்ணகாந்த். கோபாலன் ‘‘ஒன்லி,சிவாஜிகணேசன் படமா?’’ என்றான். எல்லோரும் சிரித்தார்கள். ஒன்னு ரெண்டு மற்றவங்க படமும் பார்ப்பேன். ஆனா ஒரு சிவாஜிகணேசன் படம்கூட மிஸ்பண்ணமாட்டேன். அத்தனையும் பார்த்துவிடுவேன். திருவருட்செல்வர்லே அவருடைய நடிப்பு என் மனசிலே இன்னும் ஓடிட்டே இருக்கு. … என்றான் கிருஷ்ணகாந்த்.

கோபாலன்‘‘சரி..சரி போதும் ஜெமினி, எம்.ஜி.ஆர்,முத்துராமன், நாகேஷ் எல்லாரும்தான் நல்லா நடிக்கிறாங்க. சினிமாவை விட்டுவிட்டு வேறு ஏதாச்சும் பேசுவோம் என்றான்.

கிருஷ்ணகாந்த் உடனே ‘‘சரி..கிரிக்கெட் பற்றிப் பேசுவோம்.’’ பிரஸன்னாவோட பௌலிங் வர்ற , வர்ற ….’’என்று ஆரம்பித்தான்.

உடனே கண்ணன் எனக்கு கிரிக்கட்லே ஸ்ஞான ப்ராப்தி (எந்த தொடர்பும்) யும் கிடையாது. எனக்கு அது புரியவும் இல்லே; பிடிக்கவும் இல்லே… கிரிக்கெட் பற்றி பேசாதே’’ என்றான்.

துரை நானும் பௌலிங் போட்டு போட்டுப் பார்க்கிறேன்… கை சரியாகவே சுற்றி வரவாட்டேங்குது என்று நெனைக்கிறேன். அதனாலே எல்லோரும் த்ரோன்னு சொல்றாங்க. அதனாலே கிரிக்கெட்,பேட்,பந்து எதையுமே இனிமே தொடமாட்டேன்னு சபதம் போட்டுட்டேன்’’என்றான்.

எல்லோருக்கும் சிரிப்புத்தான்.உடனே கோபாலன் ‘‘நான் அப்படீ இல்லே… எனக்கு டீமிலே வெளையாட சான்ஸ் கெடைச்சா ஒருமணிநேரம்

கீரீஸ்லே நின்று மூணு ரன் எடுப்பேன். Defence பண்ணிட்டே இருப்பேன். கட்டை போட்டுட்டே இருப்பேன். சந்து போர்டே மாதிரி நான் என்றான்.

அதற்கு எல்லோரும் சிரித்தார்கள். விசுவநாதன் "கிருஷ்ணகாந்த் எல்லோரும் இப்படித்தான் போசுவார்கள்.." வா, நாம ரெண்டு பெரும் தனியா போயி பேசுவோம்." ஏன்றான் கிருஷ்ணகாந்தும் "சரி" என்று தள்ளிப் போனான். மூடியிருந்த கடையின் படிக்கட்டுகளில் நண்பர்கள் இருவரும் உட்கார்ந்து கொண்டார்கள்.மற்ற நண்பர்கள் சாலையின் எதிர்பக்கமாக அமைந்திருந்த மற்றொரு மூடப்பட்ட கடையின் படிக்கட்டுகளில் உட்கார்ந்து கொண்டார்கள். அவர்களின் விஷயம் (Subject) வேறு.

விசுவநாதன் பேச்சை ஆரம்பித்தான். கிருஷ்ணகாந்த் ஒன்னை மாதிரி வெளையாடாட்டாலும் கமென்டரி, ரன்னிங் கமென்டரி எல்லாம் கேட்பேன். ரேடியோ டெஸ்ட் மேட்ச் கமென்டரி கேட்பது ஒரு தனி இன்பம்தான்.லாலா அமரிநாத்தோட எக்ஸபர்ட் கமெண்ட்ஸ், பாலு அழகன்ணண் ஓட, கமென்டரி எல்லோமே ஒரு பியூட்டிதான். அழகுதான். சரி பிரசன்னாவைப் பற்றி எதையோ சொல்ல வந்தியே... சொல்லு என்றான்.

கிருஷ்ணகாந்த் "பிரஸன்னாவோட ரீ என்ட்ரீ பற்றித்தான் சொல்லவந்தேன். டிகிரி படிக்கறதுக்கறதுக்காக அவர் மூணு வருஷம் விளையாடலே. இப்ப திரும்ப வந்து நல்லா பவுல் பண்ணறாரு...எந்த பேட்ச் மேனும்அவர் பாலை (பந்தை) வெளையாடத் திணர்றான்.. பந்து எங்கே பிட்ச் ஆகும்னு ஜட்ஜ் பண்றதே கஷ்டமான வேலைதான். பந்தை நல்லா Flight பண்ணறாரு. நல்ல Opp-Spinner" என்றான்.

விசுவநாதன் அந்த அளவுக்கு எல்லாம் எனக்கு தெரியாது.'' பிரசன்னா, பேடி சந்திரசேகர், நல்லா பந்து போடுவாங்க., என்றான்.பிறகு "போவோமா அவங்க எல்லாம் கூப்பிடறாங்க என்றான்; "சரி என்று கிருஷ்ணகாந்த் புறப்பட்டான்.

நண்பர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்தார்கள். துரை நான் இப்போது ஒரு முக்கியமான விஷயம் சொல்லப் போறேன். சக்திப்பொருமாள் நம்மள எல்லாம் விட்டுட்டு சேலத்துக்குப் போயிடப் போறார். ., அங்கே அவருக்கன்னு கடை கூட ஏற்பாயிடுச்சு... இனி அவரு அங்கேதான் இருப்பாரு. நாமெல்லாம் இனி அவரை அடிக்கடி பார்க்க முடியாது ,என்றான் . "உண்மையாகவா?" என்றார்கள் நண்பர்கள்.ஆமாம் என்றான் துரை. பின் அதனால்தான் வரவேற்பு முடிஞ்சதும், கொஞ்ச நேரம் அவரைப் பார்த்துப் பேசிட்டுப் போகலாம்னு